# களனி பல்கலைக்கழகம், வைத்திய பீடம்

## அங்கவீனர் கற்கை பிரிவு

## பல்கலைக்கழக நுழைவு – கல்வியாண்டு 2018/2019

## உளச்சார்பு தேர்வு

### விஞ்ஞான இளமானி பட்டம் (சிறப்பு) பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் (SHS)

களனி பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடமானது இலங்கையில் பேச்சு மற்றும் செவிமடுத்தல் விஞ்ஞானத்தில் இளமானி பட்டத்தை முன்னெடுக்கின்ற கற்கை நெறியை வழங்குகின்ற ஒரே ஒரு பல்கலைக்கழகமாகும் (விசேட பேச்சு மற்றும் செவிமடுத்தல் விஞ்ஞானமும்). இந்த கற்கை நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்வதானது தொழில் ரீதியாக ஒரு பேச்சு மற்றும் மொழிச்சிகிச்சையாளராக அல்லது செவிப்புலனியலாளராக இலங்கையில் பயிற்சி பெறுவதற்கு தகுதி பெறுவதை குறித்து நிற்கிறது. இந்த கற்கை நெறியானது சுகாதாரத்தில் பல்வேறுபட்ட அமைப்புடைய கற்றல் மற்றும் நடைமுறை அனுபவம் சார்ந்த கோட்பாடு ரீதியான வகுப்பு மேலும் கல்வி மற்றும் புனர்வாழ்வு துறை ஆகிய இரு விடயங்களை உள்ளடக்கியதாகும். இக்கற்கை நெறியின் ஒட்டுமொத்த இலக்கானது ஆய்வு மற்றும் தொழில் அபிவிருத்திக்கான சுய முயற்சியூடாக கல்வி சார்ந்த துறையின் அபிவிருத்திக்கு பங்களிப்பதும் இலங்கையின் பரந்த சமூகத்தின் விழிப்புணர்வு அறிவு மட்டத்தை உயர்த்திடுவதற்கும் தொடர்பாடல் இயலாமைகளுடனான மக்களுக்கு பல வகைப்பட்ட புனர்வாழ்வு சேவைகளை வழங்குவதற்கு தேவையான அறிவுஇ நடத்தைகள் திறன்களையுடைய தகுதி பெற்ற பேச்சும் மற்றும் மொழிச் சிகிச்சையாளர்களையும் செவிப்புலனியலாளர்களையும் பயிற்றுவிப்பதே ஆகும்.

இது நான்கு வருட கால பட்டப்படிப்பு திட்டத்தையும் கட்டமைக்கப்பட்ட பாடத்திட்டங்களையும் குறைந்தளவு கிரடிட்களையும் (120) கொண்டதாகும். இறுதி கல்வியாண்டின் போது ஒரு கட்டாயமான ஆய்வு செயற்றிட்டமொன்றினை கொண்டிருக்கிறது. **இக்கற்கை நெறி முழுமையாக ஆங்கில மொழி மூலமாகவே கற்பிக்கப்படுகிறது. (அனைத்து கற்பித்தல் மற்றும் கற்றல் செயற்பாடுகள்).** கல்வி பொதுத்தராதர உயர் தர பரீட்சையில் பௌதீகவியல் பாடத்தில் சித்தி பெற்ற மாணவர்கள் மட்டுமே செவிப்புலனியல் கற்கை நெறியில் நுழைவதற்கு அனுமதியளிக்கப்படும்.

உங்களுக்கு இக்கற்கை நெறியில் இணைந்து கொள்வதற்கு ஆர்வம் இருந்தால் உளச்சார்பு தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இணையத்தில் medicine.kln.ac.lk/shs என்ற முகவரியில் விண்ணப்பிக்கவும். மேலும் நீங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை பரிந்துரைக்கப்பட்ட முறையை பயன்படுத்தி தபால் மூலமாகவும் அனுப்பி வைக்கலாம். இணையத்தினூடாக விண்ணப்பிக்கும் போது உருவாக்கப்பட்ட குறிப்பு இலக்கத்தை இணைக்கும் ஆவணங்களில் வலப்பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு அனுப்பவும்.

விண்ணப்பப்படிவமானது கீழ்வரும் ஆவணங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

1. ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில் பின்வரும் கணக்கு இலக்கத்திற்கு - கணக்கு இல. 055-1001-30667553 மக்கள் வங்கி, களனிக் கிளை, ரூபாய் 750/= ஐ வைப்புச்செய்த பற்றுச்சீட்டு
2. உங்கள் பாடசாலை அதிபரினாலோ அல்லது சமாதான நீதிபதியினாலோ உத்தியோகபூர்வ சான்றிதழ் முத்திரை செய்யப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சை பெறுபேறுகள் சராசரி z புள்ளி (2018) என்பனவற்றை உள்ளடக்கிய 2 மூலப் பிரதிகள்.
3. மேற் கூறப்பட்ட ஆவணங்களில் உள்ள பெயர்கள் விண்ணப்பப்பத்திரத்திலிருந்து வேறுபடுகின்றன என்றால் அவர்கள் இருவரும் ஒருவர் தான் என்பதை உறுதிப்படுத்த ஒரு சத்தியவோலை சமர்ப்பிக்க வேண்டும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கிய 2018/2019ம் கல்வி ஆண்டிற்கான இலங்கை பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு நிகழச்சித் திட்டங்களுக்குரிய கையேட்டில் பிரிவு 2.2.8.24 (பக்கம் 102) இல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரி கீழ்கண்ட தகுதிகளைப் பெற்றிருந்தால் அவர் உளச்சார்புப் பரீட்சைக்கு அமரத் தகுதியுடையவர்.

1. **கலைப்பிரிவு, உயிரியல் விஞ்ஞானப் பிரிவு அல்லது இயற்பியல் (physical sciences) விஞ்ஞானப் பிரிவு** போன்ற பிரிவுகளில் குறைந்தது 3 'S' சித்தியைப் பெற்றிருத்தல்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்புடன் விண்ணப்பப்படிவங்கள் கண்டிப்பாக A4 அளவுத் தாளில் இருக்க வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பதிவுத்தபாலில் (registered post) பின்வரும் விலாசத்திற்கு "பிரதிப்பதிவாளர்/ பரீட்சைகள் களனிப்பல்கலைக்கழகம், தலுகம, களனி (Deputy Registrar/Examinations, University of Kelaniya, Dalugama, Kelaniya) 2019 ம் ஆண்டு மாசி மாதம் 15ம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைக்கவும்." கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "BSc (Special) degree in Speech & Hearing Sciences" என்று குறிப்பிடவும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்யாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

உளச்சார்புப் பரீட்சையானது 27 ம் திகதி சித்திரை மாதம் 2019 ம் ஆண்டு நடைறெும் என்பதுடன் இப்பரீட்சையானது ஆங்கில மொழியில் நடாத்தப்படும் என்பதனையும் அறியத்தருகிறோம்.

பதிவாளர்
களனிப்பல்கலைக்கழகம்
தலுகம களனி.

## களனிப் பல்கலைக்கழகம்

## உளச்சார்பு தேர்வு

## விஞ்ஞான இளமானி பட்டம் (சிறப்பு) பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் (SHS) 2018/2019

பின்வருவனவற்றை ஆங்கில பெரிய (BLOCK) எழுத்துக்களில் நிரப்பவும்.

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்: திரு/செல்வி/திருமதி
2. விண்ணப்பதாரியின் தந்தையின் பெயர் முதலெழுத்துக்களுடன்:
3. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
4. நிரந்தர முகவரி:
5. தொலைபேசி இலக்கம்:
6. விண்ணப்பதாரி 2018 ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு தோற்றிய மாவட்டம்:
7. 2018 ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தர) பரீட்சைச் சுட்டெண்:
8. க.பொ.த (உயர்தர) பரீட்சை பெறுபேறுகள் (2018):
   a. சராசரி Z புள்ளி: ☐. ☐☐☐ .
   b. பாடம் 1 ……………………….. தரம்:
   c. பாடம் 2 ………………………… தரம்:
   d. பாடம் 3 ………………………… தரம்:

மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன். இக்கற்கை நெறியானது முழுமையாக ஆங்கில மொழியில் மட்டுமே நடாத்தப்படும் என்பதை அறிந்து வைத்துள்ளேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம்: திகதி:

குறிப்பு:

1. உங்கள் விண்ணப்பப்படிவத்துடன் பின்வருவனவற்றை உள்ளடக்கி உள்ளீர்களா என்பதனை உறுதிப்படுத்துக. (a) ரூபாய் 750/= இற்கான வங்கி வைப்புச்சீட்டு (b) உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பெறுபேற்றுப் பத்திரத்தின் பிரதி மற்றும் (c) சத்தியவோலை, உங்களால் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள பெயர் வித்தியாசமாக இருந்தால் உங்களின் பெயரின் மாற்றத்திற்கான சத்தியவோலை.(affidavit)

2. நீங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த அனுமதிப் பத்திரத்தில் BSc (special degree) பேச்சு மற்றும் செவிமடுத்தல் விஞ்ஞானம் கற்கை நெறிக்காக விண்ணப்பித்திருந்தீர்கள் என்தனை உறுதிப்படுத்தவும்.